**கொழும்பை அண்டிய புகையிரதச் செயற்திட்டத்தின் கீழ் செயற்படும் போக்குவரத்துச் செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதி - 2021**

கொழும்பை அண்டிய புகையிரதச் செயற்திட்டத்தின் கீழ் செயற்படும் போக்குவரத்துச் செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதியின் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 ஒக்தோபர் 28 ஆம் திகதிய 3425 எஸ்ஆர்ஜ (எஸ்எப்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் ஐஏ ஆம் உறுப்புரையின் 04.03(அ) பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், போக்குவரத்து அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவுள்ளதுடன் இலங்கைப் புகையிரதத் திணைக்களம் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. முன்னுரிமை போக்குவரத்துச் செயற்திட்டங்களின் தயார்நிலையை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். மேம்படுத்துவதற்காக களனிப்பள்ளத்தாக்கு புகையிரத வரிசையை வடிவமைப்பதற்கான மதியுரை சேவைகளை வழங்குதல் எனும் பெயரிலான ஒரு கூறின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,654.54 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 11.36 மில்லியன் தொகையானதுடன் இதில் ரூபா 1,456.5 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 9.99 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 198.04 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியிடப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 ஒக்தோபர் 28 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2022 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | களனி பள்ளத்தாக்கு புகையிரத பாதை பகுதியில் வசிக்கும் குடும்பங்களினை மீள்குடியேற்றுவதற்கு குடியிருப்பு அடுக்குமாடி அலகுகள் நிர்மானமானது செயற்திட்ட மேற்பார்வையின் கீழ் வராதாயினும் களனி பள்ளத்தாக்கு புகையிரத பாதை பகுதியில் வசிக்கும் குடும்பங்களை மீள்குடியேற்றும் நோக்கத்துக்காக 1,244 வீட்டு அலகுகளை நிர்ப்பானிப்பதற்கு ஆறு புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு அமைவாக செயற்திட்ட அலுவலகம் மற்றும் உள்ளூராட்சி அபிவிருத்தி அதிகார சபைக்கிடையில் கையொப்பமிடப்பட்டது. 31 டிசம்பர் 2022 இல் இச்செயற்திட்டமானது முடிவடைவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. எனினும், 31 டிசம்பர் 2021 அளவில் 484 வீட்டு அலகுகள் மாத்திரமே மீள்குடியேற்ற நோக்கத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, இச்செயற்திட்டத்தின் கூறானது செயற்திட்ட காலத்தின் போது அடைய முடியாதுள்ளது. | 1,244 வீட்டு அலகுகளில் 694 வீட்டு அலகுகள் யுடிஎ இடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டது. மிகுதி 550 வீட்டு அலகுகள் தாமதமாகியுள்ளது.<br>• அரசாங்க தீர்மானத்தின் படி 144 வீட்டு தொகுதிகள் எம்ஒயு க்கு எதிராக கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.<br>• தேவையான கட்டணத்தை செலுத்துவதற்கு நிதகளானது திறைசேறியிடமிருந்து பெறப்படவில்லை. | அமைச்சரவை அங்கீகாரத்திற்கு அமைவாக கட்டுமானமானது தாமதமின்றி பூர்த்தியாக்க வேண்டும். |
| (ஆ) | கொழும்பை அண்டிய புகையிரத செய்திட்டத்தின் மிகப்பிரதான நோக்கமாக அடுத்த 20 வருடங்களுக்கான தேசிய போக்குவரத்து முறைமைக்கு இதன் பங்களிப்பை நிச்சயித்துக் கொள்வதற்கு கொழும்பை அண்டிய பிராந்தியத்தில் இலங்கை புகையிரத சேவையை அபிவிருத்தி செய்வதாக இருத்தது. இத்திட்டமானது நான்கு புகையிரத பாதைக்கான சாத்தியவள ஆய்வு மற்றும் விரிவான வடிவமைப்பு மேற்கொள்வதை உள்ளடக்கியுள்ளது. எனினும், 2021 மார்ச் இல் செயற்திட்டம் பூர்த்தியாக்கப்பட்டு சாத்தியவள ஆய்வு மற்றும் விரிவான வடிவமைப்பு அறிக்கைகள் உரிய அமைச்சுக்கு கையளித்துள்ளது. கீழ்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.<br>i. சாத்தியவள ஆய்வு அறிக்கையானது ஒரு வருடத்திற்கு மேலாக புகையிரத திணைக்களத்தில் செயலற்ற நிலையில் உள்ளது. இன்று வரை எவ்விதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.<br>ii. கடன் தவணையானது அரையாண்டுக்கொரு முறை 15 மார்ச் மற்றும் 15 செப்டம்பர் இல் செலுத்தப்பட வேண்டும். 15 மார்ச் இல் முதலாவது கடன் தவணையானது | கௌரவ பிரதமர் தலைமையில் இது தொடர்பாக 10.06.2021 ஆம் திகதியில் விரிவாக கலந்துரையாடப்பட்டது. கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவிற்கு இணங்க கே.வி புகையிரத பாதை அபிவிருத்திக்கான செயற்திட்டத்தை உருவாக்குவதற்கு தேவையான ஆயத்தப் பணிகளை தொடரவும் செயற்திட்டததை மேற்கொள்வதற்கு தேவையான நிதியினை பெறுவதற்கு ஆ.அ.வ உடன் கலந்துரையாடவும் போக்குவரத்து அமைச்சினால் அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டது. | களனி பள்ளத்தாக்கு புகையிரத பாதை அபிவிருத்திக்கான செயற்திட்டத்தை மிக விரைவாக உருவாக்குக. |

ஐ.அ.டொ. 275,000 செலுத்த வேண்டியுள்ளது.

iii. 31 டிசம்பர் 2021 அளவில் கடன் வட்டிக்கான நிதிக்கட்டணமாக ரூபா 69,345,336 இற்கு சமனான ஐ.அ.டொ. 380,000 செலுத்தப்பட்டுள்ளது.

31 டிசம்பர் 2021 அளவில் ஆசிய அபிவிருத்தி வங்கி ஏற்கனவே ரூபா. 1,506 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொ. 8.397 மில்லியனை வழங்கியுள்ளது. வழங்கிய தொகையில் 96 சதவீதமான ரூபா. 1,447 மில்லியன் சாத்தியவள ஆய்வு மற்றும் விரிவான வடிவமைப்பின் ஆலோசனை சேவைக்காக செலுத்தப்பட்டுள்ளது. சாத்தியவள ஆய்வு மற்றும் விரிவான வடிவமைப்பினை புகையிரத திணைக்களத்தில் அமுல்படுத்தப்படாமல் செயலற்ற நிலையில் காணப்பட்டது. எனவே, சாத்தியவள ஆய்வு மற்றும் விரிவான வடிவமைப்பினை அமுல்படுத்தாமல் நாட்டுக்கு பெறுபேறுகள் கிடைக்காது.

## 2.2 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| மீள்குடியேற்ற நடவடிக்கைகள் மற்றும் ஸ்மாரட் நுழைவுச்சீட்டு மற்றும் ஆசன முன்பதிவு முறைமையானது செயற்திட்ட நோக்கத்தின் முன்னோட்டத்தின் கீழ் வரவில்லையாயினும் காலத்துக்கு காலம் அமைச்சரவை தீர்மானங்களின் ஊடாக அந்நோக்கங்கள் இணைக்கப்பட்டுள்ளன. பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.<br><br>**i.** ஸ்மார்ட் நுழைவுச்சீட்டு மற்றும் ஆசன முன்பதிவு முறைமைக்கான ஆலோசனை சேவையை வழங்குவதற்காக தனியாள் ஆலோசகருக்கு மொத்தம் ரூபா. 19.21 மில்லியன் எடிபி நிதியிலிருந்து செலுத்தப்பட்டுள்ளது.<br><br>**ii.** சமூக ஆய்வினை நடத்துவதற்கும் மீள்குடியேற்ற திட்டத்தை தயாரிப்பதற்கும் யுஎன்-ஹெபிடட் இற்கு 31 டிசம்பர் 2021 அளவில் உள்நாட்டு நிதியிலிருந்து மொத்தம் ரூபா. 150.60 மில்லியன் ஏற்கனவே செலுத்தியும் மற்றும் ரூபா. 20.08 மில்லியன் செலுத்த வேண்டியும் உள்ளது | டிபிபிஎப் இன் வெளியீட்டை அமுல்படுத்தலானது அதிக நேரமும் செலவு கூடியதும் ஆகும்.. எவ்வாறாயினும், ஸ்மாரட் நுழைவுச்சீட்டு மற்றும் ஆசன முன்பதிவு முறைமை மற்றும் சில மேலதிக நடவடிக்கைகள் உள்ளடங்களாக தற்போதைய செயற்பாட்டின் முக்கிய இடையூறுகளை நிவர்த்தி செய்வது அடையாளப்படுத்தப்பட்டு இவைகளுக்கு நிதியளிப்பதற்கு எடிபி உடன்பட்டுள்ளது. | செயற்திட்ட செயற்பாடுகளின் நோக்கெல்லையை மீளாய்வு செய்து அதற்றேப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**iii.** செயற்திட்டமானது வேறொரு ஆசிய அபிவிருத்தி வங்கி கடனின் கீழ் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்ட நோக்கெல்லையில் புகையிரத மேம்பாட்டுக்காக வெளிநாட்டு ஆலோசகர் ஒருவருக்கு ரூபா. 2.89 மில்லியன் செலுத்தியுள்ளது. எனினும், செயற்திட்டத்தின் நோக்கெல்லையின் கீழ் வராத அந்த செலவினத்திற்கான எதிர்கால நடவடிக்கைகள் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.3 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
| --- | --- | --- |
| கொழும்பை அண்டிய புகையிரத செய்திட்டத்தின் செயற்திட்ட முகாமைத்துவ அலகின் மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொ. 500,000 ஆகும். எனினும், செயற்திட்ட முகாமைத்துவ அலகானது ஐ.அ.டொ. 665,351 இனை செலவளித்துள்ளது. இது ரூபா. 30.8 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொ. 165,351 ஆல் காலப்பகுதிக்காக எதிர்வுகூறப்பட்ட ஐ.அ.டொ. 500,000 இனை விஞ்சியுள்ளது. . | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்ளல் மற்றும் ஆர்இஜபி செயற்திட்டத்தின் கீழான பின்னோக்கி நிதி வசதியானது தேவையான ஆர்இஜபி நிதியை நிறைவேற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளது, சில நிர்வாக நடைமுறை இதுவரை காணப்படுவதால் பின்னோக்கி நிதியினை பயன்படுத்த முடியவில்லை. | பாதீட்டு ஒதுக்கீட்டுக்குள் செலவினமானது ஒதுக்கப்படல் வேண்டும். |